1972 ஆகஸ்டு 9]

திரு. எம். ராஜா அய்யர் : இந்த வருங்கால வைப்பு விதிகள் எல்லாம் பழங் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவை. இக்காலத்திற்கு முற்றிலும் ஒவ்வாதவை களாக இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள் என்றும், டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளிகளின் ஆசிரியர்கள் என்றும், மானியம் பெறும் பள்ளி களின் ஆசிரியர்கள் என்றும் தனித்தனியாக அதற்கு சட்டதிட்டங்கள் இன்னும் தேவைதானா? அவைகளைச் சீராக்கி ஒரே வகையான விதிகளாக அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு நோக்கமுண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் இப்போது ஆராயப் பட்டு வருகிறது.

"The question of amending the T.P.F. Rules to make provision for such investment was accepted in principle. But, the Accountant-General, Madras, raised certain clarifications, considering the difficulties that may arise in paying interest on the investments in respect of those teachers, whose income is assessable under the Income-Tax Act. This question is being examined *inter alia* in consultation with the Director of School Education."

ஆகவே இது ஆராயப்பட்ட பிறகு முடிவு எடுக்கப்படும்.

Benefits for the non-teaching staff.

* 2. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the various benefits for aided school teachers as announced in the budget speech for 1970-71 apply to the non-teaching staff in aided institutions; and

(*b*) if not, the reasons therefor ?

ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு நலன்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71 வரவு செலவுத் திட்ட உரையின்போது அறிவித்த மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கான பல்வேறு நலன்கள் மானியம் பெறும் நிறு வனங்களின் ஆசிரியரல்லாத பணியாளருக்கும் பொருந்துமா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப்போல் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன :—

(1) அரசு மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் இலவச மருத்துவ வசதி.

(2) வீட்டு வாடகைப்படி.

(3) கைத்தறித்துணி வாங்க முன்பணம், பண்டிகை முன்பணம் ஆகிய வற்றை அவர்களது வருங்கால வைப்பு நிதியிலிருந்து வழங்குதல்.

(4) ஓராண்டில் நான்கு திங்கள்வரை குளிர்கால படி.

இவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு வழங்கி யிருக்கும் ஒரு நலன் அவர்கள் ஓய்வுபெறும் வயதைப் பொறுத்ததாகும். ஆசிரியர் அல்லாத சிப்பந்திகளுக்கும் அந்த ஓய்வு பெறும் வயதின் உச்ச வரம்பு ஆசிரியர்களுக்கு ஒப்ப பொருந்துமா என்று அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓய்வு பெறும் வயதைப் பொறுத்தவரை, ஆசிரியர் அல்லாதவர்களுக்கு, மற்ற அரசாங்கப் பள்ளிகளில் பணி புரிபவர்களுக்கு என்ன நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதுதான் நிர்ண யிக்கப்படும். ஆசிரியர்களைப் பொருத்தவரையில் அரசாங்கப் பள்ளிகளில் உள்ள முறைதான், தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

B.T. Assistants.

*3. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the representation for increase in the minimum of the new scale of B.T. Assistants has been considered; and

(b) if so, the stage at which the matter now stands ?

பி.டி. ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிய சம்பள விதத்தில் குறைந்த அளவு அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துமாறு பி.டி. ஆசிரியர்கள் செய்து கொண்ட முறையீடு பரிசீலிக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அப்பரிசீலினை இப்போது எந்நிலையில் உள்ளது ?